செ.வெ.எண்:67 நாள்: 15.06.2021

**விழுப்புரம் மாவட்டத்தில் கூட்டுறவு , உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு கொரோனா சிறப்பு நிதி உதவித்தொகை இரண்டாம் தவணையாக ரூ.2000/- மற்றும் 14 பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை பொருட்கள் தொகுப்பை வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் தொடங்கி வைத்தார்.**

விழுப்புரம் மாவட்டத்தில் கூட்டுறவு , உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு கொரோனா சிறப்பு நிதி உதவித்தொகை இரண்டாம் தவணையாக ரூ.2000/- மற்றும் 14 பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை பொருட்கள் தொகுப்பை வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் இன்று (15.06.2021) தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் உள்ள 2,09,81,900 அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு ரூ.4,196.38 கோடி செலவில், இரண்டாவது தவணையாக கொரோனா சிறப்பு நிதி உதவித்தொகை ரூ.2000/- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் அறிவிக்கப்பட்டு 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

மேலும். கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களின் சிரமத்தை குறைக்கும் வகையில் ரூ.844.51 கோடி செலவில் (1கிலோ கோதுமை மாவு, 1 கிலோ உப்பு, 1/2 கிலோ சர்க்கரை, 500 கிராமம் உளுத்தம் பருப்பு, 250 கிராம் புளி. 250 கிராம் கடலை பருப்பு, 100 கிராம் கடுகு, 100 கிராம் சீரகம், 100 கிராம் மஞ்சள் தூள், 100 கிராம் மிளகாய் தூள், 200 கிராம் டீ தூள், குளியல் சோப்பு மற்றும் துணி சோப்பு) 14 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய மளிகை தொகுப்பினை வாழங்கும் திட்டத்தையும் 03.06.2021 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இதனை தொடர்ந்து இன்றைய தினம் விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர், டி.எடையார் மற்றும் சித்தலிங்கமடம் ஆகிய ஊராட்களில் கூட்டுறவு , உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு கொரோனா சிறப்பு நிதி உதவித்தொகை இரண்டாம் தவணையாக ரூ.2000/- மற்றும் 14 பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை பொருட்கள் தொகுப்பை வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதன்படி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள **1254** நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள **5,93,363** குடும்ப அட்டைதாரர்கள் பெற்று பயனடைய உள்ளனர். **மேலும் கொரோனா சிறப்பு நிதி உதவித்தொகை இரண்டாம் தவணையாக ரூ.2000/- மற்றும் 14 பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை பொருட்கள் தொகுப்புகளை பெறாத அரிசி குடும்ப அட்டை தாரர்கள் இந்த மாதம் முழுவதும் சம்மந்தப்பட்ட நியாய விலை கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை இ.ஆ.ப, மாவட்ட காவல் கண்கணிப்பாளர் டாக்டர்.த.ஸ்ரீ.நாதா இ.கா.ப.,, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.க.பிரபாகரன் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

……………………………………………………………………………………..

வெளியீடு :செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் - விழுப்புரம்